1987 மார்ச் 10]

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே ஜனதா கட்சி எதிர்க்கிறது,

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன். அதை அரசு திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் வேளாண்மைப் பணிகள் பல இடங்களில், விவசாயக் கருவிகள் பழுதுபட்டு சரி செய்யப்படாமல் உள்ளதால், பாதிப்புக் குள்ளான நிலையில் இருக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்கு உடனடியாகத் தேர்தலை நடத்துவதாக அறிவித்து, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமே தவிர, இந்தச் சட்ட முன்வடிவை தமிழ்நாடு அரசு நிறைவேற்றக்கூடாது என்று அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

Thiru T. VENKATA REDDY : Mr. Speaker Sir, I am grateful to the Tamil Nadu Government and also to the Minister for having introduced the Bill on Kelavarapalli Reservoir Scheme (Acquisition of Land), though it is late. It is a "Varaprasadam" for our area. I request thc Government to finish it within six months

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்–விவாதம்—தொடர்ச்சி.

திரு. கி. மனோகரன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது கடந்த 5 அல்லது 6 நாட்களாக இந்த அவையின் சார்பாக மொத்தம் 67 பேர் பங்கு பெற்று, தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு முன்பு ஒன்றைத் தெரிவிக்க எனக்கு நீங்கள் அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **இதுசம்பந்தமான பேச்சுக்கள் அவைக்குறிப்பில் இருக்கக் கூடாது.

திரு. கி. மனோகரன் : எனது பேச்சின் ஆரம்பத்தில் நான் மிக்க வேதனையோடும், வருத்தத்தோடும் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, தமிழகத்திலே நிலவிக் கொண்டிருக்கிற கடுமையான வறட்சி பற்றியதாகும்,

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியங்கள் என்று அழைக்கப்படுகிற தஞ்சை மாவட்டமும், கன்னியாகுமரி மாவட்டமும் பாலைவனங்களாக மாறிக்கொண்டிருக்கின்றன என்ற செய்திகளைத் தாங்கி தினந்தினம் பத்திரிகைகள் வந்துகொண்டிருக்கின்றன. வறட்சி இந்த அளவுக்குக் கடுமையாக இருக்கிறபோது—இந்த முறைகள் எல்லாம் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்ற காரணத்தால் தெரிவிக்கிறேன்—கலெக்டர்கள் மாநாடுகளை அடிக்கடி கூட்டி, அமைச்சரவையை அடிக்கடி கூட்டி, அதோடு நிற்காமல் பாரதத்தின் இளைய பிரதமர் திரு. ராஜிவ் காந்தி அவர்களைத் தமிழகத்திற்கு அழைத்து வந்து வறட்சிப் பகுதிகளைப் பார்க்க வைக்க வேண்டுமென்ற கடமை இந்த அரசுக்கு உண்டு என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதத்தின் பிரதமர் அவர்களை எப்படி கர்நாடக முதலமைச்சர் திரு. ஹெக்டே அவர்கள் அழைத்தார்களோ, அழைத்து பெற வேண்டிய வாய்ப்பைப் பெற்றார்களோ அந்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.